KALANJIYAM
Volume 5, Issue 06, July 2026
Peer-Reviewed | Open Access | Bilingual

eISSN: 2456-5148

*Article Type: Research Article*

# Thirumandhiram and Thirukkural - A Comparative Study

## திருமந்திரமும் திருக்குறளும் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு

**முனைவர் ப. மகேஸ்வரி**

*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (அரசு உதவி) என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி – 642 001*

**Corresponding Author Email: ngmcollegelibrary@gmail.com*

**Manuscript ID: KAL-2026-0003** | *Issue DOI:* https://doi.org/10.63300/kijts05sp062026

Date of Submission: 27-06-2026 Date of Acceptance: 01-07-2026

## Abstract

Thirumandhiram, authored by Thirumoolar, and Thirukkural, authored by Thiruvalluvar—two prominent classical works in Tamil literary tradition—articulate the fundamental moral principles essential for human life. Although composed in different periods and for distinct purposes, both works share notable thematic convergence on five fundamental moral concepts: impermanence (நிலையாமெ), non-killing (கொல்லாமை), non-coveting another's wife (பிறன்மனை நயவாமை), abstinence from alcohol (கள்ளுண்ணாமை), and meat rejection (புலால் மறுத்தல்). This paper establishes this conceptual alignment using direct textual citations from the primary sources. The central finding of this research is that while Thirukkural emphasizes an external, socially grounded virtue of living, Thirumandhiram stresses an internal, spiritually oriented path toward liberation. Through comparative analytical tables examining each core concept individually, this study concludes that both texts collectively present a holistic philosophy of life that harmoniously blends ethics and spirituality.

## ஆய்வுச் சுருக்கம் (Abstract in Tamil)

தமிழ் இலக்கிய மரபில் தனிச்சிறப்புப் பெறும் இரு நூல்களான, திருமூலர் இயற்றிய திருமந்திரமும் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளும் மனித வாழ்வியலுக்கு அடிப்படையான ஒழுக்க நெறிகளை எடுத்துரைக்கின்றன. வெவ்வேறு காலகட்டங்களிலும், வெவ்வேறு நோக்கங்களிலும் இயற்றப்பட்ட இவ்விரு நூல்களும், நிலையாமை, கொல்லாமை, பிறன்மனை நயவாமை, கள்ளுண்ணாமை, புலால் மறுத்தல் ஆகிய ஐந்து அடிப்படை அறக்கருத்துகளில் குறிப்பிடத்தக்க கருத்தொற்றுமையைக் கொண்டுள்ளன என்பதை இக்கட்டுரை மூல நூல்களிலிருந்து நேரடி மேற்கோள்களுடன் நிறுவுகிறது. திருக்குறள் புறவயமான, சமூகவழி வாழ்வியல் அறத்தை வலியுறுத்த, திருமந்திரம் அகவயமான, ஆன்மீக விடுதலையை நோக்கிய நெறியை வலியுறுத்துகிறது என்பது இவ்வாய்வின் முக்கியக் கண்டறிதலாகும். ஒப்பீட்டு அட்டவணைகள் மூலம் ஒவ்வொரு கருத்தையும் தனித்தனியே பகுப்பாய்வு செய்து, இரு நூல்களும் இணைந்து அறமும் ஆன்மீகமும் கலந்த முழுமையான வாழ்வியல் தத்துவத்தை வழங்குகின்றன என்பதை இக்கட்டுரை முடிவாக முன்வைக்கிறது.

## Keywords

Thirumandhiram, Thirukkural, Thirumoolar, Thiruvalluvar, Comparative Literature, Impermanence, Non-killing, Ethics/Morality, Spirituality

## திறவுச் சொற்கள் (Keywords in Tamil)

திருமந்திரம், திருக்குறள், திருமூலர், திருவள்ளுவர், ஒப்பீட்டு இலக்கியம், நிலையாமை, கொல்லாமை, அறநெறி, ஆன்மீகம்

## 1. முன்னுரை

தமிழ் இலக்கியம் உலகின் தொன்மையான இலக்கிய மரபுகளுள் ஒன்றாகும். மனித வாழ்க்கையை வெளிப்படுத்தும் பல சிறந்த நூல்கள் தமிழில் தோன்றியுள்ளன. அவற்றுள் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளும், திருமூலர் இயற்றிய திருமந்திரமும் சிறப்பிடம் பெறுகின்றன. இரு நூல்களும் மனிதனின் ஒழுக்கம், அன்பு, நல்லொழுக்கம், உடல், உயிர் மற்றும் உயர்ந்த வாழ்க்கை பற்றிப் பேசுகின்றன.

திருக்குறள் அறம் சார்ந்த உலகியல் வாழ்க்கைக்கு ஞானத்தின் வழியாக உயர்ந்த நிலையை அடைவதற்கான வழியை எடுத்துரைக்கிறது. திருக்குறள் மனிதன் சமூகத்தில் எவ்வாறு பொறுப்புடன் வாழ வேண்டும் என்பதை விளக்குகிறது. திருமந்திரம் மனிதன் தன் உடல், மனம், உயிர், ஆன்மா ஆகியவற்றை எவ்வாறு சுத்தப்படுத்தி இறைநிலையை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதை விளக்குகிறது. இரண்டின் நோக்கங்களும் ஒன்றல்ல எனினும், மனிதன் நல்லொழுக்கத்துடனும் அன்புடனும் தன்னடக்கத்துடனும் உயர்ந்த நோக்கத்துடனும் வாழ வேண்டும் என்ற கருத்தில் அவை ஒன்றுக்கொன்று நெருக்கமாக உள்ளன. திருமூலரின் திருமந்திரத்தையும், திருவள்ளுவரின் திருக்குறளையும் கருத்து நிலையில் ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

### 1.1. ஆய்வு நோக்கங்கள்

i. திருமந்திரமும் திருக்குறளும் முன்வைக்கும் அடிப்படை அறக்கருத்துகளை மூல நூல் மேற்கோள்களுடன் ஒப்பிட்டு ஆராய்தல்.

ii. இரு நூல்களுக்கும் இடையேயான கருத்தொற்றுமைகளையும், அணுகுமுறை வேற்றுமைகளையும் அடையாளம் காணல்.

iii. திருக்குறள் முன்வைக்கும் புறவயமான சமூக அறமும், திருமந்திரம் முன்வைக்கும் அகவயமான ஆன்மீக நெறியும் இணையும் விதத்தை வெளிக்கொணர்தல்.

### 1.2. ஆய்வு முறையியல்

இக்கட்டுரை பகுப்பாய்வு முறையிலும், ஒப்பீட்டு இலக்கிய ஆய்வு முறையிலும் அமைந்துள்ளது. திருமந்திரம் மற்றும் திருக்குறள் ஆகிய இரு மூல நூல்களிலிருந்தும் நேரடி மேற்கோள்கள் எடுக்கப்பட்டு, அவை பொருள் விளக்கத்துடன் ஆராயப்பட்டு, ஐந்து முக்கியக் கருத்துத் தளங்களின் அடிப்படையில் (நிலையாமை, கொல்லாமை, பிறன்மனை நயவாமை, கள்ளுண்ணாமை, புலால் மறுத்தல்) கருத்தொற்றுமை/வேற்றுமை நோக்கில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு தலைப்பிலும் இரு நூல்களின் அணுகுமுறையையும் தெளிவுபடுத்தும் வகையில் ஒப்பீட்டு அட்டவணைகள் இணைக்கப்பட்டுள்ளன.

### 1.3. நூல்கள் பற்றிய சுருக்கக் குறிப்பு

திருமூலர் இயற்றிய திருமந்திரம் பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக விளங்குகிறது. இது 3000-த்திற்கும் மேற்பட்ட பாடல்களைக் கொண்டு, ஒன்பது தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டு, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாத நெறிகளையும் சைவ சித்தாந்தத் தத்துவங்களையும் விளக்கும் ஆன்மீக நூலாகும். திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலைக் கொண்டு, 133 அதிகாரங்களில் 1330 குறள் வெண்பாக்களை உள்ளடக்கிய, உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் அறநூலாகும். இரு நூல்களும் தோன்றிய காலம் குறித்து அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை இருப்பினும், இரண்டும் தமிழ்ச் சமூகத்தின் அறவியல் மற்றும் ஆன்மீக மரபை ஆழமாகப் பாதித்த நூல்களாகும்.

## 2. நிலையாமை (Impermanence)

உடல், உயிர், செல்வம் ஆகிய யாவும் நிலையில்லாத தன்மை உடையவை. நிலையாமை குறித்துத் திருமூலர் கூறும் செய்திகளையும், திருவள்ளுவர் தரும் செய்திகளையும் ஒப்பு நோக்கலாம். திருமூலர் ஆக்கை (உடல்), செல்வம், இளமை என நான்காகப் பகுத்துக் கூறுகிறார்.

### 2.1. உடல் நிலையாமை

உடலின் நிலையாமை குறித்துத் திருமூலர் திருமந்திரப் பாடல் 145-இல் பின்வருமாறு விளக்குகிறார். ஊரார் அனைவரும் கூடி அழுது, உயிர் நீங்கியவுடன் அவரது பெயரை நீக்கிப் 'பிணம்' என்று பெயரிட்டு, சுடுகாட்டிற்குக் கொண்டுசென்று எரித்துவிட்டு, பின்னர் நீரில் நீராடி அவரை நினைத்தலையே மறந்துவிடுவர் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது:

*“ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்*

*பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்*

*சுடுகாட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு*

*நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே"*

**— திருமந்திரம், பாடல் 145**

உடல் சாவதற்கு முன்பு இருந்த பெயரை மாற்றி, 'பிணம்' என்று பெயர் சூட்டி, சுடுகாட்டுக்குக் கொண்டு சென்று எரித்துவிட்டு, நீராடி விட்டு, அவரை நினைத்தலையே கைவிடுவது - இதுவே உடலின் நிலையாமையின் மறுக்க முடியாத சான்று என்பதைத் திருமூலர் வலியுறுத்துகிறார்.

இதே கருத்தினைத் திருவள்ளுவரும் குடும்பை/உடல்-உயிர் நட்பு உவமையின் மூலம் திருக்குறள் 338-இல் தெளிவுபடுத்துகிறார்:

*"குடம்பை தனித்தொழியப் புள் பறந்தற்றே*

*உடம்பொடு உயிரிடை நட்பு"*

**— திருக்குறள், குறள் 338**

முட்டை தனித்துக் கிடக்க, அதனுள் இருந்த குருவி பருவம் வந்தவுடன் பறந்துபோன தன்மையை ஒத்திருப்பதே உடலோடு உயிர் கொண்டிருக்கும் நட்பு எனக் குறள் விளக்குகிறது. உயிர் போகவேண்டிய தருணம் வந்தபோது தானாகவே போய்விடும் என்பதை இக்குறள் உணர்த்தும் பொருளாகும்.

### 2.2. செல்வ நிலையாமை

'செல்வ நிலையாமை' குறித்துத் திருமூலர் திருமந்திரப் பாடல் 173-இல் பின்வருமாறு விளக்குகிறார்:

*"மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே*

*அவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம் போல்*

*அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடு பேறாகச்*

*சிமிழொன்று வைத்தமை சேர்ந்தறி யாரே"*

**— திருமந்திரம், பாடல் 173**

மகிழ்வதற்குரிய செல்வமும் உடனே அழிந்துவிடும். கரையழிந்து செல்லும் நீரின்மேல் மிதந்து செல்லும் படகைப் போன்றது அது. அழிந்துபோகும் தன்மை உடைய இவ்வுடலுக்கு வீடுபேறே (முக்தியே) நிலையான புகலிடம் என்பதையும், உடல் என்பது ஆன்மாவைத் தற்காலிகமாக

வைத்திருக்கும் ஒரு சிமிழ் (பேழை) மட்டுமே என்பதையும் அரிதின் ஒரு சிலரே உணர்கின்றனர் என்று திருமூலர் எடுத்துரைக்கிறார்.

இதே கருத்தினைத் திருவள்ளுவரும் திருக்குறள் 333-இல் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்:

*"அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்*

*அற்குப ஆங்கே செயல்"*

**— திருக்குறள், குறள் 333**

நிலைத்து நிற்காத தன்மையுடையது செல்வம். அத்தகைய நிலையற்ற செல்வத்தைப் பெற்றால், பெற்ற உடனேயே நிலையான அறச்செயல்களைச் செய்யவேண்டும் என்பதே இக்குறளின் கருத்தாகும். செல்வத்தின் நிலையாமையை உணர்ந்து, அதைக் கொண்டு நிலையான புண்ணியச் செயல்களைச் செய்யவேண்டும் என வலியுறுத்தும் இக்குறள், திருமூலரின் கருத்துடன் நேரடியாக ஒத்துப்போகிறது.

இவ்வாறு, உடல் மற்றும் செல்வம் ஆகிய இரண்டின் நிலையாமையையும் திருமூலரும் திருவள்ளுவரும் ஒரே கருத்தில் வெவ்வேறு உவமைகளின் மூலம் வலியுறுத்துகின்றனர் என்பது தெளிவாகிறது.

**Table 1.**

| அம்சம் | திருமந்திரம் அணுகுமுறை | திருக்குறள் அணுகுமுறை |
|---|---|---|
| மையக் கருத்து | உடலும் செல்வமும் ஆன்மீக விடுதலையை உணர்த்தும் அழிதற்குரிய கருவிகள் | உடலும் செல்வமும் அறச்செயலுக்கு வாய்ப்பாக அமையும் தற்காலிக நிலைகள் |
| பயன்படுத்தும் உவமை | நீரில் மிதந்துசெல்லும் கலம், பிணம், சிமிழ் | முட்டை தனித்து விட்டுப் பறந்த குருவி |
| வலியுறுத்தும் விளைவு | வீடுபேறு (முக்தி) நோக்கிய விழிப்புணர்வு | செல்வம் கிடைத்தவுடன் அறம் செய்யும் கடமை |
| மேற்கோள் | பாடல் 145, 173 | குறள் 338, 333 |

## 3. கொல்லாமை (Non-Violence)

சமண, பௌத்த சமயங்கள் உயிர்க்கொலை புரியாமையைப் பெரிதும் வலியுறுத்திய சமயங்கள் ஆகும். இவற்றைப் போன்றே திருமூலரும் கொல்லாமையை வலியுறுத்துகிறார். வாழ்வியல் அறம் கூறும் திருவள்ளுவர் கொல்லாமையை வலியுறுத்துவதில் வியப்பேதுமில்லை.

Copyright © 2026 by the author(s)

eISSN: 2456-5148

கொலைத் தொழில் புரிவோரை எமலோக தூதுவர் கடுமையாகத் தண்டிப்பர் என்பதைத் திருமூலர் திருமந்திரப் பாடல் 198-இல் விளக்குகிறார். 'கொல்' எனவும் 'குத்து' எனவும் கூறிய மக்களை எமனுடைய தூதுவர்கள் வலிமையான கயிற்றால் கட்டி, உரமான கத்தியால் வெட்டி, தீயுடன் கூடிய நரகத்தில் தள்ளி நிறுத்துவர் என்பதே இப்பாடலின் பொருளாகும் (திருமந்திரம், பாடல் 198).

இதே கருத்தினைத் திருவள்ளுவரும் திருக்குறள் 326-இல் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்:

*"கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்*

*செல்லாது உயிர்கொல் களவு"*

**— திருக்குறள், குறள் 326**

கொல்லாமையை ஒரு கொள்கையாக மேற்கொண்டு ஒழுகுகின்றவனுடைய வாழ்நாள் மீது, உயிர் கொல்லும் பாவம் சென்று சேராது என்பதே இக்குறளின் பொருளாகும். கொல்லாமையைக் கடைப்பிடிப்பவனுக்கு அப்பாவம் எவ்வகையிலும் பாதிப்பை உண்டாக்காது என்பதை இக்குறள் உறுதிபடக் கூறுகிறது.

இருவரும் கொலையின் விளைவை - திருமூலர் மறுமையில் அனுபவிக்கும் நரகத் துன்பமாகவும், திருவள்ளுவர் இம்மையிலும் மறுமையிலும் தொடரும் தீவினையின் பாவமாகவும் - வெவ்வேறு கோணத்தில் சித்தரித்தாலும், 'உயிர்க்கொலை தவிர்க்கத்தக்க மாபெரும் பாவம்' என்னும் அடிப்படைக் கருத்தில் இருவரும் முற்றிலும் ஒன்றுபடுகின்றனர்.

**Table 2.**

| அம்சம் | திருமந்திரம் அணுகுமுறை | திருக்குறள் அணுகுமுறை |
|---|---|---|
| தண்டனை/விளைவு | எமதூதரால் மறுமையில் நரகதண்டனை | கொல்பாவம் வாழ்நாள் மீது சேராமை |
| நோக்கு | அச்சம் தரும் தண்டனை உருவகம் | நேர்மறையான பாதுகாப்பு உறுதிமொழி |
| பொதுக் கருத்து | கொலை பெரும் பாவம் என்னும் எச்சரிக்கை | கொல்லாமை மேலான அறம் என்னும் உறுதிப்பாடு |
| மேற்கோள் | பாடல் 198 | குறள் 326 |

## 4. பிறன்மனை நயவாமை (Not Coveting Another's Spouse)

இராமனின் மனைவியை அடைய நேர்ந்த காரணத்திற்காக இராவணன் தன் இன்னுயிரை நீக்க வேண்டிய நிலை ஏற்பட்டது; ஏனெனில், இராவணன் தன் மனைவி இருக்க அடுத்தவரின் மனைவியிடத்துக் காதல் கொண்டான். அதனால் உயிரிழந்தான். மக்கள் தங்களின் வாழ்க்கை

Copyright © 2026 by the author(s)

முறையில் பிறர் மனைவியை இச்சையோடு அணுகுவதை மிகவும் ஒழுக்கக் கேடான செயலாகக் கருதினர். திருமூலரும் திருவள்ளுவரும் 'பிறன்மனை நயவாமை' குறித்து விளக்குகின்றனர்.

கட்டிய மனைவி வீட்டில் இருக்கவும், காத்திருக்கும் மனைவி வீட்டில் இருக்கவும், பிறருடைய மனைவியை விரும்பும் காளைகள் தங்களது சொந்த வீட்டில் பழுத்திருக்கும் பலாப்பழத்தை உண்ணாமல், காட்டில் பழுத்திருக்கும் ஈச்சம் பழத்தைப் பறித்துத் தின்பதற்குப் பெருந் துன்பத்தை அடைவதைப் போன்றது எனத் திருமூலர் திருமந்திரப் பாடல் 201-இல் விளக்குகிறார். இதன் அடிப்படையில் பிறர் மனைவியை விரும்பாமல் இருத்தல் வேண்டும் என்பதே திருமூலரின் கருத்தாகும்.

இதே கருத்தினைத் திருவள்ளுவரும் திருக்குறள் 148-இல் பின்வருமாறு உரைக்கிறார்:

*"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு*

*அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு"*

**— திருக்குறள், குறள் 148**

பிறருடைய மனைவியிடத்தில் விருப்பம் கொள்ளாத பெரிய ஆண்தன்மையே, சான்றோர்க்கு அறனும் ஆகும்; நிறைவான ஒழுக்கமும் ஆகும் என்பதே இக்குறளின் பொருள். வெளிப்புறப் பகைவரை அடக்கும் ஆண்மையுடையவர்களுக்கும் உள்ளேயுள்ள காமம் என்னும் பகையை அடக்குதல் அரிதாதலால், அதனை அடக்கிய ஆண்மையையே திருவள்ளுவர் 'பேராண்மை' என்று சிறப்பித்துக் கூறுகிறார்.

இருவரும் இக்கருத்தை உவமையின் வழி விளக்குவதில் வேறுபடினும், 'பிறன் மனையாளிடம் ஆசைப்படாதிருத்தலே உயர்ந்த ஒழுக்கமும் ஆண்மையும்' என்னும் இறுதி முடிவில் முற்றிலும் ஒத்துப்போகின்றனர்.

**Table 3.**

| அம்சம் | திருமந்திரம் அணுகுமுறை | திருக்குறள் அணுகுமுறை |
|---|---|---|
| விளக்க முறை | பலாப்பழம் - ஈச்சம்பழம் உவமை வழி | நேரடி அறவுரை வழி |
| சிறப்புச் சொல் | ஒழுக்கக் கேடான செயல் | பேராண்மை / ஆன்ற ஒழுக்கு |
| எடுத்துக்காட்டு | இராவணன் வரலாற்றுப் பின்னணி | சான்றோர் பொது இயல்பு |
| மேற்கோள் | பாடல் 201 | குறள் 148 |

eISSN: 2456-5148

## 5. கள்ளுண்ணாமை (Abstinence from Alcohol)

சங்க காலத்தில் கள் உண்ணுதல் பெரு வழக்கமாக இருந்தது. ஆனால் பின்னர் தோன்றிய நீதி நூல் காலத்தில் கள்ளுண்ணாமை வலியுறுத்தப்பட்டது; ஏனெனில் மக்கள் வாழும் முறை காலத்திற்குக் காலம் மாறுபடுகிறது. திருமூலரும் திருவள்ளுவரும் கள்ளுண்ணாமையை வலியுறுத்துகின்றனர்.

மயக்கம் தரும் மது, அதை உண்பவரின் மெய்யறிவை அழிக்கும்; இயங்கும் பெண்டிரிடம் இன்பமே பெரிதென எண்ணி மயங்கச் செய்யும். இத்தகைய தன்மையுடைய கள்ளை உண்பவர் நல்ல ஞானத்தில் கால் பதிக்க மாட்டார்கள்; அவர்களது இயல்பும் குணமும் மாறிவிடும்; இறைவனுடைய ஆனந்தப் பேறும் அவர்களை நெருங்காது என்பதைத் திருமூலர் திருமந்திரப் பாடல் 330-இல் விளக்குகிறார். எனவே கள்ளுண்பதைத் தவிர்க்க வேண்டும் என்பது திருமூலரின் அறிவுரையாகும்.

இதே கருத்தினைத் திருவள்ளுவரும் திருக்குறள் 927-இல் பின்வருமாறு விளக்குகிறார்:

*"கள்ளொற்றிக் கண்சாய் பவர்"*

**— திருக்குறள், அதிகாரம் 93 (கள்ளுண்ணாமை), குறள் 927**

மதுவை உண்டு, அதன் மயக்கத்தால் கண்கள் தளர்ந்து சாய்பவரின் நிலையை இக்குறள் சுட்டுகிறது. கள்ளுண்பவரின் மனநிலையும் புலனுணர்வும் சிதைந்து, அவர்கள் தம் நிலையிலிருந்து வழுவுவதையே திருவள்ளுவரும் இக்கள்ளுண்ணாமை அதிகாரம் முழுவதிலும் வலியுறுத்துகிறார். 'உட்கப் படாஅர் ஒளியிழப்பர்' எனத் தொடங்கும் இவ்வதிகாரம், மதுவினால் மனிதன் இழக்கும் அறிவொளி, மானம், நிதானம் ஆகியவற்றை முழுமையாக விளக்குகிறது.

மதுவினால் ஏற்படும் அறிவிழப்பையும், நிலை தடுமாற்றத்தையும் இருவரும் ஒரே தீவிரத்துடன் கண்டித்திருப்பது கவனிக்கத்தக்கது.

**Table 4.**

| அம்சம் | திருமந்திரம் அணுகுமுறை | திருக்குறள் அணுகுமுறை |
|---|---|---|
| இழக்கும் பண்பு | மெய்யறிவும், ஞானநிலையும், இறை ஆனந்தமும் | ஒளியும் (புகழ்), கண் நிலைப்பும் (நிதானம்) |
| விளக்கும் கோணம் | ஆன்மீக முன்னேற்றத்திற்கு இடையூறு | சமூக மதிப்பிற்கும் சுயக்கட்டுப்பாட்டிற்கும் இடையூறு |
| இறுதி எச்சரிக்கை | இறை ஆனந்தப் பேறு கிடைக்காது | வாழ்நாள் முழுவதும் இழிவு தொடரும் |

| அம்சம் | திருமந்திரம் அணுகுமுறை | திருக்குறள் அணுகுமுறை |
|---|---|---|
| மேற்கோள் | பாடல் 330 | குறள் 927 (அதிகாரம் 93) |

## 6. புலால் மறுத்தல் (Rejection of Meat-Eating)

'புலால் உண்ணாமை' என்பது சமண, பௌத்த சமயங்கள் வலியுறுத்திய தலையாய கொள்கையாகும். கொல்லாமையை வலியுறுத்தும் கொள்கைகள் புலால் உண்ணாமையையும் வலியுறுத்தவே செய்கின்றன. திருமூலர் திருமந்திரப் பாடல் 199-இல், மிகத் தீய உணவைப் புசிக்கும் கீழோரை எமனுடைய தூதுவர்கள் அனைவரும் காணும்படியாக, செல்லைப் போலப் பற்றி, தீப்பற்றி எரிகின்ற நரகத்தில் தள்ளிவிடுவர் என விளக்கி, புலால் உண்ணாமையை வலியுறுத்துகிறார். இல்லையெனில் எமலோக நகரத்தில் தீயிலிட்டு எரிக்கப்படுவீர் எனவும் அவர் எச்சரிக்கிறார்.

இதே கருத்தினைத் திருவள்ளுவரும் திருக்குறள் 260-இல் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்:

*“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*

*எல்லா உயிரும் தொழும்”*

**— திருக்குறள், குறள் 260**

எந்த உயிரையும் கொல்லாதவனாய், புலால் உண்ணாதவனாய் விளங்குகின்ற ஒருவனை, இவ்வுலகிலுள்ள எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும் என்பதே இக்குறளின் பொருளாகும். புலால் மறுத்தலை வெறும் தவிர்ப்பாக மட்டுமன்றி, அனைத்து உயிர்களின் மதிப்பையும் பெறத்தக்க உயரிய பண்பாகவே திருவள்ளுவர் சிறப்பித்துக் கூறுகிறார்.

திருமூலர் புலால் உண்ணுவதன் விளைவாக மறுமையில் ஏற்படும் தண்டனையை அச்சத்தின் வழி எடுத்துரைக்க, திருவள்ளுவர் புலால் மறுத்தலால் இம்மையிலேயே கிடைக்கும் உலகப் பொதுமதிப்பையும் வணக்கத்தையும் நேர்மறையாக முன்வைக்கிறார். அணுகுமுறையில் வேறுபாடு இருப்பினும், 'உயிர்க்கொலையின் நீட்சியே புலால் உண்ணல்; அதைத் தவிர்த்தலே சிறந்த அறம்' என்னும் மையக் கருத்தில் இருவரும் ஒன்றுபடுகின்றனர்.

**Table 5.**

| அம்சம் | திருமந்திரம் அணுகுமுறை | திருக்குறள் அணுகுமுறை |
|---|---|---|
| வலியுறுத்தும் விதம் | நரகத் தண்டனை வழி அச்சமூட்டல் | உலக வணக்கம் வழி புகழ்ச்சி |
| இணைந்த கருத்து | கொல்லாமையின் நீட்சியாகப் புலால் மறுத்தல் | கொல்லாமையின் முழுமையாகப் புலால் மறுத்தல் |

| அம்சம் | திருமந்திரம் அணுகுமுறை | திருக்குறள் அணுகுமுறை |
|---|---|---|
| பெறும் பயன் | மறுமை பாதுகாப்பு | எல்லா உயிர்களின் வணக்கம் |
| மேற்கோள் | பாடல் 199 | குறள் 260 |

## 7. ஒப்பீட்டுச் சுருக்க அட்டவணை

மேற்கண்ட ஐந்து கருத்துத் தளங்களிலும் திருமந்திரமும் திருக்குறளும் மேற்கொள்ளும் அணுகுமுறையை ஒரே பார்வையில் காணும் வகையில் பின்வரும் தொகுப்பு அட்டவணை தரப்படுகிறது:

**Table 6.**

| ஒப்பீட்டு அம்சம் | திருமந்திரம் | திருக்குறள் |
|---|---|---|
| ஆசிரியர் | திருமூலர் | திருவள்ளுவர் |
| நூல் இயல்பு | ஆன்மீக/சாத்திர நூல் (பன்னிரு திருமுறையுள் பத்தாம் திருமுறை) | பொது அற நூல் (உலகப் பொதுமறை) |
| கட்டமைப்பு | 9 தந்திரங்கள், 3000-க்கும் மேற்பட்ட பாடல்கள் | 3 பால், 133 அதிகாரம், 1330 குறள் |
| மைய நோக்கம் | உள்ளார்ந்த ஆன்மீக விடுதலை (வீடுபேறு) | வெளிப்புற சமூக அற வாழ்வு |
| வலியுறுத்தும் முறை | அச்சமூட்டும் விளைவு / மறுமைப் பயன் | நேரடி அறவுரை / இம்மைப் பயன் |
| நிலையாமை | பாடல் 145, 173 | குறள் 338, 333 |
| கொல்லாமை | பாடல் 198 | குறள் 326 |
| பிறன்மனை நயவாமை | பாடல் 201 | குறள் 148 |
| கள்ளுண்ணாமை | பாடல் 330 | குறள் 927 |
| புலால் மறுத்தல் | பாடல் 199 | குறள் 260 |
| பொதுவான முடிவு | ஐந்திலும் அறநெறியை ஆன்மீக இலக்கை நோக்கிய படிக்கட்டாகக் காட்டுகிறது | ஐந்திலும் அறநெறியை நல்வாழ்விற்கான அடித்தளமாகக் காட்டுகிறது |

## 8. முடிவுரை

திருமந்திரமும் திருக்குறளும் தமிழனின் அறிவு, ஒழுக்கம், ஆன்மீக சிந்தனையின் சிறப்பை வெளிப்படுத்தும் சிறந்த நூல்களாகும். திருக்குறள் அறம் சார்ந்த உலகியல் வாழ்க்கைக்கு ஞானத்தின் வழியாக உயர்ந்த நிலையை அடைவதற்கான வழியை எடுத்துரைக்கிறது; மனிதன்

Copyright © 2026 by the author(s)

eISSN: 2456-5148

சமூகத்தில் எவ்வாறு பொறுப்புடன் வாழ வேண்டும் என்பதை விளக்குகிறது. திருமந்திரம் மனிதன் தன் உடல், மனம், உயிர், ஆன்மா ஆகியவற்றை எவ்வாறு சுத்தப்படுத்தி இறைநிலையை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதை விளக்குகிறது.

இரண்டின் நோக்கங்களும் ஒன்றல்ல எனினும், மனிதன் நல்லொழுக்கத்துடனும் அன்புடனும் தன்னடக்கத்துடனும் உயர்ந்த நோக்கத்துடனும் வாழ வேண்டும் என்ற கருத்தில் அவை ஒன்றுக்கொன்று நெருக்கமாக உள்ளன. திருக்குறள் வெளிப்புற வாழ்க்கையின் அறநெறியை வழங்குகிறது; திருமந்திரம் உள்ளார்ந்த வாழ்க்கையின் ஆன்மீக நெறியை வழங்குகிறது.

இன்றைய உலகில் சமூக நீதி, நல்லாட்சி, மனிதநேயம், உடல்நலம், மனஅமைதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஆன்மீகத் தேடல் ஆகிய அனைத்தும் அவசியமாகின்றன. இவை அனைத்திற்கும் திருக்குறளும் திருமந்திரமும் தத்தம் வழிகளில் வழிகாட்டுகின்றன. எனவே, திருக்குறள் நல்வாழ்விற்கான அறவழியையும், திருமந்திரம் உயர்ந்த ஆன்மீக வாழ்விற்கான வழியையும் சமூகப் பொறுப்பை உணர்த்துகின்றன. திருமந்திரத்தைப் படிப்பவன் உள்ளார்ந்த உண்மையைத் தேடுகிறான்; இரண்டையும் இணைத்துப் படிப்பவன் அறத்துடனும் ஆன்மீக உணர்வுடனும் கூடிய முழுமையான மனித வாழ்க்கையை நோக்கிச் செல்ல முடியும் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

### துணை நின்ற நூல்கள் (மூல ஆய்வேட்டில் குறிப்பிடப்பட்டவை)

1. திருமந்திரம் : தி.வி. வெங்கடராமன், பாரதி பதிப்பகம், 108, உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை – 600 017.

2. திருக்குறள் : தமிழ்ச் செம்மல் புலவர் சி. இராசையன், எளிய உரை, மீனா புத்தக நிலையம், 20B/2 மூன்றாவது தெரு, அபிராம்புரம், சென்னை – 600 018, முதற்பதிப்பு 1993.

### Works Cited

[1]. Thirumoolar. Thirumandhiram. Edited by Dee. Vee. Venkataramanan, Bharathi Pathippagam, 1993.

[2]. Valluvar, Thiru. Thirukkural: Eliya Urai. Edited by C. Rasaiyan, Meena Puththaga Nilayam, 1993.

[3]. Pope, G. U., translator. The Sacred Kural of Thiruvalluva Nayanar. W. H. Allen, 1886.

[4]. Varadarajanar, Mu. Thirukkural: Thelivurai. Thirunelveli Dennison and Company, 1949.

[5]. Zvelebil, Kamil V. The Smile of Murugan: On Tamil Literature of South India. E. J. Brill, 1973.

[6]. Kandaswamy, S. N. Saiva Siddhanta. Dr. S. Ramanathan Memorial Trust, 1996.

Copyright © 2026 by the author(s). Published by Department of Library, NGM College, Pollachi 642001. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).